செய்தி வெளியீடு எண்:297 நாள்:09.06.2009

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நலவாரியங்களின் கீழ் வரும் 35 லட்சம் பதிவு விண்ணப்பதாரர்களுக்கு காப்பீடு வழங்குவதற்கான கணிணிமயமாக்கப்பட்ட மென்பொருள் குறுந்தகடை ISO 9001 – 2008 தரச்சான்றிதழ் பெற்றுள்ள அசென்டர்ஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட், மென்பொருள் நிறுவனம் வழங்கியுள்ளது. சுமார் பதினைந்து வருடமாக பதிவேடுகளில் பராமரிக்கப்பட்ட நலவாரிய உறுப்பினர்களின் விண்ணப்ப படிவ விவரங்கள் தற்பொழுது கணிணி மயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மென்பொருள் திட்டங்களில் முதன்முறையாக ‘Portable Database” என்ற தொழில்நுட்பம் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக தொழிலாளர்களின் குடும்ப விபரங்களையும், நியமன விபரங்களையும் எளிதாக தெரிந்து கொள்வதுடன், நலத்திட்ட பயன்களை விரைவாக பெற முடியும். இத்திட்டத்தின் வாயிலாக காப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டம் எளிதாகும் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக, தாலுக்கா வாரியாக, கிராம வாரியாக பதிவு செய்யப்பட்ட ஒரு தொழிலாளியின் முழு விபரங்களையும் தெரிந்து கொள்ள முடியும். இன்று (9.6.2009) தமிழகம் முழுவதும் 31 மாவட்டங்களின் குறுந்தகடு தொகுப்பினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வெளியிட்டுள்ளார். இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பிரபாகர்ராவ், இ.ஆ.ப., தொழிலாளர் நல ஆணையர், திரு.ஆ.சுகுமாரன், இ.ஆ.ப., தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய செயலர், திரு.டி.அழகேசன், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரிய செயலர், திரு.வெ.இராசா, அசென்டர்ஸ் மென்பொருள் நிறுவன இயக்குநர் டாக்டர். கே.திருஞானம், திருமதி.ஜெயலஷ்மி திருஞானம் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9